ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே கூரேஶாயநம:
ஸ்ரீ தாஶரதி மஹாகுரவே நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:
ஸ்ரீ வாநாத்ரி யோகிநே நம: ஸ்ரீ வேங்கட குரவே நம:
அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்

## ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி திருமாளிகை




### ஸ்ரீமணவாள மாமுனிகள் அருளிச்செய்த

# ஆர்த்தி ப்ரபந்தம்

### ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி தனியன்

பாதுகே யதிராஜஸ்ய கதயந்தி யதாக்யயா |
தஸ்ய தாஶரதே: பாதௌ ஶிரஸா தாரயாம்யஹம் ||

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே கூரேஶாயநம:
ஸ்ரீ தாஶரதி மஹாகுரவே நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:
ஸ்ரீ வானாத்ரி யோகிநே நம: ஸ்ரீ வேங்கட குரவே நம:
அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்

ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி திருமாளிகை

**வர்தமான ஸ்வாமி ஸ்ரீ உ.வே.கோ.க.வா.அ.**
**குமார ராமாநுஜாசார்யர்**



## வர்த்தமான ஸ்வாமி தனியன்

ஸ்ரீமத் வதூல குல வாரிதி பூர்ண சந்த்ரம்
வாதூல வேங்கட குரூத்தம புத்ர ரத்நம் |
ஸ்ரீஸைல தேஶிக க்ருபாப்த ஸமஸ்த போதம்
ராமாநுஜார்ய குருவர்ய மஹம் ப்ரபத்யே ||

ஸ்ரீவேங்கடார்ய தநயம் தத்பாத கமலாஶ்ரயம் |
வாதூலாந்வய பூர்ணேந்தும் ராமாநுஜ குரும் பஜே ||


| | |
|---|---|
| **Swami Mudaliandan Thirumaligai**<br>4/345, Sannadhi Street,<br>**Singaperumal Koil**,<br>Chenglpet District,<br>Tamil Nadu, India. PIN 603 204 | **Swami Mudaliandan Thirumaligai**<br>73, East Chithra St,<br>**Srirangam**, Trichy,<br>Tamil Nadu, India. PIN 620 006 |
| **Swami Mudaliandan Thirumaligai**<br>51, Sannadhi Street,<br>**Kancheepuram**,<br>Tamil Nadu, India. Pin 631 501 | **Swami Mudaliandan Thirumaligai**<br>**Thirunarayanapuram**,<br>Karnataka, India. PIN 571 431 |
| **Swami Mudaliandan Thirumaligai**<br>Next to Theerthavaari Mandapam,<br>Vaazhai Kulam Street,<br>**Srivilliputhur**,<br>Tamil Nadu, India. PIN 626 125 | **Swami Mudaliandan Thirumaligai**<br>Sannadhi Street,<br>**Kooram**10 KM from Kancheepuram,<br>Tamil Nadu, India. PIN 631 558 |

**E Mail:** sridasarathy@gmail.com, acharya@mudaliandan.com
**Website:** www.mudaliandan.com
**Phone:** 91711 12050 , 96294 18994

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே கூரேஶாயநம:
ஸ்ரீ தாஶரதி மஹாகுரவே நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:
ஸ்ரீ வானாத்ரி யோகிநே நம: ஸ்ரீ வேங்கட குரவே நம:
அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்

## ஸ்ரீமணவாள மாமுனிகள் அருளிச்செய்த

# ஆர்த்தி ப்ரபந்தம்

## தனியன்கள்

**கோயில் கந்தாடையண்ணன் அருளிச்செய்தது**

தேன் பயிலும் தாரான் எதிராசன் சேவடி மேல் *
தான் பரமபத்தி தலை எதுத்து * - மாந்தர்க்கு
உணவாக ஆர்தியுதன் ஒண்தமிழ்கள் செய்தான் *
மணவாள மாமுனிவன் வந்து

வம்பவிழ்த்தார் வண்மை மணவாள மாமுனிவன் *
அம்புவியிற் கால் பொருந்தா ஆர்தியினால் * - உம்பர்தொழும்
விண்ணுலகிற் செல்ல விரைந்தெதிராஸன் பதங்கள் *
நண்ணி உரைத்தான் னமக்கு

---

## ஸ்ரீமணவாள மாமுனிகள் அருளிச்செய்த

# ஆர்த்தி ப்ரபந்தம்

வாழி ஏதிராசன் வாழி எதிராசன் *
வாழி ஏதிராசன் என வாழ்துவார் * - வாழி என
வாழ்துவார் வாழி என வாழ்துவார் * தாளிணையில்
தாழ்துவார் விண்ணோர் தலை

இராமானுசாய நம என்று சிந்தித்து *
இராமானுசரோடு இறைப்பொழ்து * - இராமாறு
சிந்திப்பார் தாளிணையில் சேர்ந்திருப்பார் * தாளிணையை
வந்திப்பார் விண்ணோர்கள் வாழ்வு

தந்தைநற்றாய் தாரம் தனயர் பெருஞ்செல்வம் *
என்தனக்கு நீயே எதிராசா! * - இந்தநிலைக்கு
ஏலாத இவ்வுடலை இன்றே அறுத்தருள *
பாராதது என்னோ பகர்?

இன்த உடல் சிறைவிட்டு எப்பொழுது யானேகி *
அந்தமில் பேரின்பத்துள் ஆகுவேன் * - அந்தோ!
இரங்காய் எதிராசா! என்னை இனியுய்க்கை *
பரங்காண் உனக்கு உணர்ந்து பார்

தன் புதல்வன் கூடாமல் தான் புசிக்கும் போகத்தால் *
இன்புறுமோ? தந்தை எதிராசா! * - உன் புதல்வன்
அன்றோ உரையாய் யான் ஆதலால் * உன்போகம்
நன்றோ எனை ஒழிந்த நாள்

வேம்பு முற்றக் கைப்பு மிகுவது போல் * வெவ்வினையேன்
தீம்பு முற்றும் தேகமுற்றிச் செல்லுங்கால் * - ஆம்பரிசால்
ஏற்கவே சிந்தித்து எதிராசா! * இவ்வுடலைத்
தீர்க்கவேயான வழி செய்
அன்னை குடிநீர் அருந்தி * முலையுண் குழவி

தன்னுடைய நோயைத் தவிராளோ * - என்னே!
எனக்கா எதிராசா! எல்லாம் நீசெய்தால் *
உனக்கு அது தாழ்வோ உரை

தன் குழவி வான் கிணற்றைச் சார்ந்திருக்கக் கண்டிருந்தாள் *
என்பதன்றோ அன்னை பழி யேற்கின்றாள் * - நன்குணரில் *
என்னாலே யென்னாகு மேலும் எதிராசா! *
உன்னாலே யாமுறவையோர்

கூபத்தில்வீழும் குழவியுடன் குதித்து * அவ்
வாபத்தை நீக்கும் அந்த அன்னை போல் *- பாபத்தால்
யான் பிறப்பேனேலும் இனி எந்தை எதிராசன் *
தான் பிறக்கு மென்னை உய்ப்பதா

பூமகள் கோன் தென்னரங்கர் பூங்கழற்குப் பாதுகமாய்த் *
தாம் மகிழும் செல்வச் சடகொபர் * - தேமலர்த்தாட்கு
உய்ந்தினிய பாதுகமாம் எந்தை இராமானுசனை *
வாய்ந்தெனது நெஞ்சமே! வாழ்

உன்னையொழிய ஒரு தெய்வம் மற்றறியா *
மன்னு புகழ்சேர் வடுகநம்பி * - தன்னிலையை
என் தனக்கு நீ தந்து எதிராசா! * எந்நாளும்
உன் தனக்கே ஆட்கொள் உகந்து

தேசம் திகழும் திருவாய்மொழிபிள்ளை *
மாசில் திருமலையாழ்வார் * என்னை நேசத்தால்
எப்படியே எண்ணி நின்பால் சேர்த்தார் எதிராசா! *
அப்படியே நீ சேய்தருள்

எதிராசன் வாழி எதிராசன் வாழி *
எதிராசன் வாழி என்றேத்திச் * - சதிராக
வாழ்வார்கள் தாளிணைக்கீழ் வாழ்வார்கள் பெற்றிடுவர் *
ஆழ்வார்கள் தங்கள் அருள்
அதிகாரமுண்டேல் அரங்கர் இரங்காரோ *

அதிகாரம் இல்லாதார்க்கு அன்றோ - எதிராசா
நீயிரங்க வேண்டுவது * நீயும் அதிகாரிகளுக்கே
இரங்கில் * என்செய்வோம் யாம்

எம்பெருமானார் திருவதிகளே சரணம் *
என்பதுவே நாவுரைக்கும் இத்தாலென் * - அன்பவர்பால்
இப்போதளவும் யான் ஒன்றும் காண்கின்றிலேன் *
எப்போது உன்டாவதினி?

ஆகாததீதென்ற்றிந்தும் பிறர்க்கு உரைத்தும்
ஆகாததே செய்வன் ஆதலால் * - மோகான்தன்
என்று நினைத்து என்னை இக்ழேல் எதிராசா! *
என்று உன்னடி சேர்வன் யான்

பொல்லாங்கு அனைத்தும் பொதிந்து கொண்டு * நன்மையில்
ஒன்றில்லா எனக்கும் எதிராசா! * நல்லார்கள்
நண்ணும் திருநாட்டை நான் தருவனென்று நீ *
தண்ணென்றிருக்கிறதென் தான் ?

என்று விடுவது எனக்கு எந்தாய் எதிராசா ! *
ஒன்றும் அறிகின்றிலேன் உரையாய் * - குன்றாமல்
இப்படியே இந்த உயிர்க்கு என்றும் இருளே விளைக்கும் *
இப்பவமாம் நீண்ட இரவு

அல்லும் பகலும் யான் ஆக்கை வழியுழன்று *
செல்லுமது உன் தெசுக்குத் தீங்கன்றோ * நல்லார்கள்
தந்தனயர் நீசர்க்காட்செய்யச் சகிப்பாரோ *
எந்தை எதிராசா! இசை

**எண்சீராசிரிய விருத்தம்**

போம் வழியைத் தரும் என்னும் இன்பம் எல்லம்
    புசித்து வழி போய் அமுத விரசையாற்றில் *
நாம் மூழ்கி மலமற்றுத் தெளிவிசும்பை
    நண்ணி நலந் திகழ் மேணி தன்னை பெற்றுத் *
தாம் அமரர் வந்தெதிர் கொண்டலங்கரித்துச்

சற்கரிப்ப மாமணி மண்டபத்துச் சென்ற *
மாமலராள் கோன் மடியில் வைத்துகக்கும்
வாழ்வு * நமக்கு எதிராசன் அருளும் வாழ்வே

**கட்டளைக்கலித்துறை**

திருமலையாழ்வார் திருவாய்மொழிப்பிள்ளை சீர்ருளால் *
தருமதிகொண்டவர் தம்மை உத்தாரகராக எண்ணி
இரு மனமே! * அவர்க்காய் எதிராசர் எம்மைக் கடுக
பரமபதம் தன்னில் ஏற்றுவர் * என்ன பயம் நமக்கே

தீதற்ற ஞானத் திருவாய்மொழிப்பிள்ளை சீரருளால் *
ஏதத்தை மாற்றும் எதிராசர் தம் அபிமானம் என்னும் *
போகத்தை ஏறிப் பவமாம் புணரிதனைக் கடந்து *
கோதற்ற மாதவன் பாதக் கரையைக் குறுகுவனே

அடியார்கள் குழாங்களழ கோலக்கம் இருக்க
ஆநந்தமயமான மாமணி மண்டபத்துப் *
படியாதுமில் படுக்கையாய் இருக்கும் அனன்தன்
பணாமணிகள் தம்மின் ஒளி மண்டலத்தின் இடையில் *
வடிவாரும் மாமலராள் வலவருகும் மற்றை
மண்மகளுமாய் மகளும் இடவருகும் இருக்க *
நடுவாக வீற்றிருக்கும் நாரணனைக் கடுக
நான் அனுபவிக்கும் வகை நல்கென் எதிராசா!

இந்த உடல்விட்டுரவி மண்தலத்தூடேகி
இவ்வண்டம் கழித்திடையில் ஆவரணமேழ் போய் *
அந்தமில் பாழ்கடந்து அழகார் விரசை தனில் குளித்தங்கு
அமானவனால் ஒளி கொண்ட சோதியும் பெற்று * அமரர்
வந்தெதிர் கொண்டு அலன்கரித்து வாழ்த்தி வழி நட்த்த
வைகுந்தம் புக்கு மணி மண்டபத்துச் சென்று *
நம் திருமால் அடியார்கள் குழாங்களுடன் கூடும்
நாள் எனக்குக் குருகும் வகை நல்கென்ன எதிராசா!

என்று நிரேதுகமாக என்னை அபிமானித்து

யானும் அறிந்துனக்கேயாய் இருக்கும் வகை செய்தார் *
அன்றுமுதல் இன்றளவும் அநவரதம் பிழையே
அடுத்தடுத்துச் செய்வது அநுதவிப்பது இனிச்செய்யேன் *
என்றுன்னை வந்திரப்பதாம் என் கொடுமை கண்டும்
இகழாதே இரவு பகல் அடிமை கொண்டு போந்தாய் *
இன்று திருநாடும் எனக்கருள எண்ணுகின்றாய்
இனிக் கடுகச் செய்தருள வேண்டும் எதிராசா!

தென்னரங்கர் தமக்காமோ தேவியர்கட்காமோ
சேனையர் கோன் முதலான சூரியர்கட்காமோ *
மன்னிய சீர்மாறன் அருள்மாரி தனக்காமோ
மற்றும் உள்ள தேசிகர்கள் தங்களுக்குமாமோ *
என்னுடைய பிழை பொறுக்க யாவருக்கு முதியும்
எதிராசா! உனக்கன்றி யானொருவர்க்கு ஆகேன் *
உன்னருளால் எனக்குருசி தன்னையும் முண்டாக்கி
ஒளி விசும்பில் அடியேனை ஒருப்படுத்து விரைந்தே

இவ்வுலகில் இனியொன்றும் எண்ணாதே நெஞ்சே
இரவுபகல் எதிராசர் எமக்கினிமேல் அருளும் *
அவ்வுலகை அலர்மகள் கோன் அங்கிருக்கும் இருப்பை
அடியார்கள் குழாங்கள்தமை அவர்கள் அனுபவத்தை *
இவ்வுயிருமதுக் கிட்டுப் பிறந்திழந்து கிடந்த
என்னும் அத்தை என்றுமதுக் கிடைச் சுவராய்க் கிடக்கும் *
வெவ்வினையால் வந்தவுடல் விடும்பொழுதை விட்டால்
விலையும் இன்பம் தன்னை முற்றும் விடாமல் இருந்தெண்ணே

பண்டு பலவாரியரும் பார் உலகோர் உய்யப்
பரிவுடனே செய்தருளும் பல்கலைகள் தம்மைக் *
கண்டதெல்லாம் எழுதி அவை கற்றிருந்தும் பிறர்க்குக்
காதலுடன் கற்பித்தும் காலத்தைக் கழித்தேன் *
புண்டரீகை கேள்வனுறை பொன்னுலகு தன்னில்
போக நினைவொன்றும் இன்றிப் பொருந்தி இங்கே இருந்தேன் *
எண்டிசையும் ஏத்தும் எதிராசன் அருளாலே
எழில் விசும்பையன்றி இப்போதென் மனம் ஏண்ணாதே
சாருவாக மதம் நீறு செய்து சமணச் செடிக்கனல் கொளுத்தியே

சாக்கியக் கடலை வற்றுவித்து மிகுசாங்கியக்கிரி முறித்திட *
மாறுசெய்திடுகணாத வாதியர்கள் வாய்தகர்த்தறமிகுத்து மேல்
வந்த பாசுபதர் சிந்தியோடும் வகை வாது செய்த எதிராசனார் *
கூறுமாகுரு மத்த்தொடோங்கிய குமாரிலன் மதம் அவற்றின் மேல்
கொடிய தர்க்க்சரம்விட்டபின் குறுகிய மாயவாதியரை வென்றிட *
மீறிவாதில்வரும் பாற்கரன் மதவிலக்கடிக் கொடி எறிந்து போய்
மிக்க யாதவமதத்தை மாய்த்த பெருவீரர் நாளும் மிக வாழியே

சீராரும் எதிராசர் திருவடிகள் வாழி
திருவரையிற் சாத்திய செந்துவராடை வாழி *
ஏராரும் செய்யவடிவு எப்பொழுதும் வாழி
இலங்கிய முந்நூல் வாழி இணைத் தோள்கள் வாழி *
சோராத துய்ய செய்ய முகச்சோதி வாழி
தூமுறுவல் வாழி துணைமலர்க் கண்கள் வாழி *
ஈராறு திருநாமம் அணிந்த எழில் வாழி
இனி திருப்போடெழில் ஞானமுத்திரை வாழியே

அறுசமயச் செடியதனை அடி அறுத்தான் வாழியே
அடர்ந்து வரும் குதிருட்டிகளை அறத்துறந்தான் வாழியே *
செறுகலியைச் சிறிதுமறத் தீர்த்து விட்டான் வாழியே
தென்னரங்கர் செல்வமுற்றும் திருத்தி வைத்தான் வாழியே *
மறை அதனில் பொருள் அனைத்தும் வாய் மொழிந்தான் வாழியே
மாறன் உரை செய்த தமிழ் மறை வளர்த்தோன் வாழியே *
அறம்மிகு நற்பெரும்பூதூர் அவதரித்தான் வாழியே
அழகாரும் எதிராசர் அடியிணைகள் வாழியே

**பன்னிருசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்**

சங்கர பாற்கர யாதவ பாட்டப் பிரபாகரர் தங்கள் மதம்
சாய்வுற வாதியர் மாய்குவர் என்று சதுமறை வாழ்ந்திடு நாள் *
வேங்கலி இங்கினி வீறு நமக்கிலை என்று மிகத் தளர் நாள்
மேதினி நஞ்சுமை ஆறும் எனத் துயர் விட்டு விளங்கிய நாள் *
மங்கயராளி பராங்குச முன்னவர் வாழ்வு முளைத்திடு நாள்
மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்றும் உவந்திடு நாள் *
செங்கயல் வாவிகள் சூழ் வயல் நாளும் சிறந்த பெரும்பூதூர்ச்

சீமான் இளையாழ்வார் வந்தருளிய நாள் திருவாதிரை நாளே

இன்னம் எத்தனை காலம் இந்த உடம்புடன் யான் இருப்பன்
இன்ன பொழுது உடம்பு விடும் இன்னபதி அதுதான் *
இன்னவிடத்தே அதுவும் என்னும் இவை எல்லாம்
எதிராசா! நீ அறிதி யான் இவை ஒன்றறியேன் *
என்னை இனி இவ்வுடம்பை விடுவித்து உன் அருளால்
ஏராரும் வைகுந்தத்தேற்ற நினைவுண்டேல் *
பின்னை விரையாமல் மறந்திருக்கிறதென் பேசாய்
பேதைமை தீர்த்து என்னை அடிமை கோண்ட பெருமானே!

முன்னை வினை பின்னை வினை பிராரத்தம் என்னும்
மூன்று வகையான வினைத் தொகை அனைத்தும் * யானே
என்னை அடைந்தோர் தமக்குக் கழிப்பன் எனும் அரங்கர்
எதிராசா! நீ இட்ட வழக்கன்றோ சொல்லாய் *
உன்னை அல்லதறியாத யான் இந்த உடம்போடு
உழன்று வினைப்பயன் புசிக்க வேண்டுவது ஒன்றுண்டோ *
என்னுடைய இருவினையை இறைப்பொழுதில் மாற்றி
ஏராரும் வைகுந்தத்யேற்றி விடாய் நீயே

அருளாலே அடியேனை அபிமானிதருளி
அனவரதம் அடிமை கொள்ள நினைத்து நீ இருக்க *
மருளாலே புலன் போக வாஞ்சை செய்யும் என்தன்
வல்வினையை மாற்றி உன் பால் மனம் வைக்கப் பண்ணாய் *
தெருளாரும் கூரதாழ்வானும் அவர் செல்வத்
திருமகனார் தாமும் அருளிச் செய்த * தீமைத்
திரளான அத்தனையும் சேர உள்ள என்னைத்
திருத்தி உய்யக்கொள்ளும் வகை தேரும் எதிராசா!

**நேரிசை வெண்பா**

வாசனையில் ஊற்றமோ மாளாத வல்வினையோ *
ஏதென்று அறியேன் எதிராசா! * - தீதாகும்
ஐம்புலனில் ஆசை அடியேன் மனம் தன்னை *

வன்புடனே தான் அடரும் வந்து

இன்றளவும் இல்லா அதிகாரம் * மேலும் எனக்கு
என்றுளதாம் சொல்லாய் எதிராசா! * - குன்றா
வினைத் தொடரை வெட்டி விட்டு * மேலே வைகுந்தத்து
எனைக் கடுக ஏற்றாததென்

அஞ்சில் அறியாதார் ஐம்பதிலும் தாமறியார் *
என் சொல் எனக்கோ எதிராசா *- நெஞ்சம்
உன் தாள் ஒழிந்தவற்றையே உகக்க * இன்றும்
அநுதாபம் அற்றிருக்கையால்

வேம்பு கறியாக விருன்பினார் கைத்ததென்று *
தாம் புகடாதே புசிக்கும் தன்மை போல்* - தீம்பன் இவன்
என்று நினைத்து என்னை இகழார் எதிராசர் *
அன்றறிந்து அங்கீகரிக்கையால்

அவத்தே பொழுதை அடியேன் கழித்துப் *
பவத்தே இருக்கும் அது பண்போ - திவத்தே யான் *
சேரும் வகை அருளாய் சீரார் எதிராசா! *
போரும் இனி இவ்வுடம்பைப் போக்கு

எனைப் போல் பிழை செய்வார் இவ்வுலகில் உண்டோ *
உனைப் போல் பொறுக்க வல்லாரும் உண்டோ * -
அனைத்துலகும்
வாழப் பிறந்த எதிராசா மாமுனிவா! *
ஏழைக்கிரங்காய் இனி

ஐம்புலன்கள் மேலிட்டரும் பொழுது அடியேன் *
உன் பதங்கள் தம்மை நினைந்தோலமிட்டால் * - பின்பவை தாம்
என்னை அடராமல் இரங்காய் எதிராசா!*
உன்னை அல்லால் எனக்குண்டோ

இந்த உலகில் பொருந்தாமை ஏதும் இல்லை *
அந்த உலகில் போக ஆசையில்லை * - இந்த நமக்கு
எப்படியோ தான் தருவர் எந்தை எதிராசா! *
ஒப்பில் திருநாடுகந்து

மாகாந்த நாரணனார் வைகும் வகை அறிந்தோர்க்கு *
ஏகாந்தம் இல்லை இருள் இல்லை * - மோகாந்தர்
இவ்விடம் ஏகாந்தம் இருள் என்று பயம் அற்றிருந்து
செய்வார்கள் தாம் பாவத்திறம்

நாராயணன் திருமால் நாரம் நாம் என்னும் முறை *
ஆராயில் நெஞ்சே அநாதி அன்றோ * - சீராரும்
ஆசாரியனாலே அன்றோ நாம் உய்ந்ததென்று
கூசாமல் எப்பொழுதும் கூறு

திருவாய்மொழிப்பிள்ளை தீவினையோம் தம்மைக் *
குருவாகி வந்துய்யக் கொண்டு * - பொருவில்
மதி தான் அளித்தருளும் வாழ்வன்றோ நெஞ்சே! *
எதிராசர்க்கு ஆளானோம் யாம்

**கட்டளைக் கலித்துறை**

இராமானுசாய நம என்று இரவும் பகலும் சிந்தித்து *
இராமானுசர்கள் இருப்பிடம் தன்னில் இறைப் பொழுதும் *
இராமானுசர் அவர்க்கெல்லா அடிமையும் செய்ய எண்ணி *
இராமானுசர் தம்மை மானுசரா என் கொல் எண்ணுவதே!

எண்ணாது என் நெஞ்சம் இசையாதென் நா இறைஞ்சாது சென்னி *
கண்ணானவை ஒன்றும் காணலுறா * கலியார் நலிய
ஒண்ணாத வண்ணம் உலகளித்தோன் எதிராசன் அடி
நண்ணாதவரை * அரங்கேசர் செய்த நலம் நமக்கே

நந்தா நரகத்து அழுந்தாமை வேண்டிடில் நானிலத்தீர்! *
எந்தாதையான எதிராசனை நண்ணும் * என்றும் அவன்
அந்தாதி தன்னை அனுசந்தியும் அவன் தொண்டருடன் *

சிந்தா குலம் கெடச் சேர்ந்திரும் முத்தி பின் சித்திக்குமே

அவத்தெ அருமந்த காலத்தைப் போக்கி * அறிவின்மையால் இப்
பாவத்தே உழல்கின்ற பாவியர்காள் * பல காலம் நின்று
தவத்தே முயல்பவர் தங்கட்கும் எய்த ஒண்ணாத * அந்த
திவத்தே உமை வைக்கும் சிந்தியும் நீர் எதிராசன் என்றே

என்றுளன் ஈசனும் உயிரும் அன்றே உண்டிக் காலம் எல்லாம் *
இன்றளவாகப் பழுதே கழிந்திருவினையால் *
என்றிழவின்ரியிருக்கும் என் நெஞ்சம் இருவு பகல்
நின்று தபிக்கும் * எதிராசா! நீ அருள் செய்த பின்னே

கனக கிரி மேல் கரிய முகில் போல் *
வினதை சிறுவன் மேற்கொண்டு *- தனு விடும் போது
ஏரார் அரங்கர் எதிராசர்க்காக * என் பால்
வாரா முன் நிற்பர் மகிழ்ந்து

**எண்சீராசிரிய விருத்தம்**

இதத்தாலே தென்னரங்கர் செய்கின்றதென்றறிந்தே
இருந்தாலும் தற்கால வேதனையின் கனத்தால் *
பதைத்தாலோ என்னும் இந்தப் பாவ உடம்புடனே
பல நோவும் அனுபவித்திப்பவத்திருக்கப் போமோ *
மதத்தாலே வல்வினையின் வழி உழன்று திரிந்து
வல்வினையேன் தன்னை உனக்காளாக்கிக் கொண்ட *
இதத்தாயும் தந்தையுமாம் எதிராசா! என்னை
இனிக் கடுக இப்பவத்தினின்றும் எடுத்தருளே

**கட்டலைக்கலிப்பா**

இன்னம் எத்தனை நாள் இவ்வுடம்புடன்
இருந்து நோவு படக் கடவேனையோ! * -
என்னை இதினின்றும் விடுவித்து நீர்
என்று தான் திருநாட்டினுளே ஏற்றுவீர் *
அன்னையும் அத்தனும் அல்லாத சுற்றமும்
ஆகி என்னை அளித்தருள் நாதனே *

என் இதத்தை இராப் பகல் இன்றியே
ஏகமெண்ணும் எதிராச வள்ளலே!

தென்னரங்கர் சீர் அருளுக்கிலக்காகப் பெற்றோம்
திருவரங்கம் திருப்பதியே இருப்பாகப் பெற்றோம் *
மன்னிய சீர் மாறன் கலை உணவாகப் பெற்றோம்
மதுரகவி சொற்படியே நிலையாகப் பெற்றோம் *
முன்னவராம் நம் குரவர் மொழிகள் உள்ளப் பெற்றோம்
முழுதும் நமக்கவை பொழுது போக்காகப் பெற்றோம் *
பின்னை ஒன்று தனில் நெஞ்சு பேராமல் பெற்றோம்
பிறர் மினுக்கும் பொறாமை இல்லாப் பெருமையும் பெற்றோமே

**நேரிசை வெண்பா**

உன்தன் அபிமானமே உத்தாரகம் என்று *
சிந்தை தெளிந்திருக்கச் செய்த நீ * - அந்தோ!
எதிராசா! நோய்களால் என்னை நலக்காமல் *
சதிராக நின் திருத்தாள் தா

தேசிகர்கள் போற்றும் திருவாய்மொழிப்பிள்ளை *
வாசமலர்த் தாள் அடைந்த வத்துவென்னும் *- நேசத்தால்
என் பிழைகள் காணா எதிராசா! அடியேன் *
புன் பகர்வைக் கேளும் பொறுத்து

எந்தை திருவாய்மொழிப்பிள்ளை இன்னருளால் *
உன்தன் உறவை உணர்ந்த பின் * - இந்த உயிர்க்கு
எல்லா உறவும் நீ என்றே எதிராசா! *
நில்லாதது உண்டோ என் நெஞ்சு

எந்தை திருவரங்கர் ஏரார் கருடன் மேல் *
வந்து முகம் காட்டி வழி நடத்த * - சிந்தை செய்திப்
பொல்லா உடம்புதனைப் போக்குவது என்னாள் கொலோ *
சொல்லாய் எதிராசா! சூழ்ந்து

இந்த அரங்கத்தினிதிரு நீ என்று அரங்கர் *
எந்தை எதிராசர்க்கீந்தவரம் * - சிந்தை செய்யில்
நம்மதன்றோ நெஞ்சமே! நற்றாதை சொம்புதல்வர்
தம்மதன்றோ தாயமுறை தான்

**வேங்கடகுரவே நம:**
**அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்**
**ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி திருவடிகளே சரணம்**
**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்**

---